# தகனமும் கனனமும்

GF
R673x1:g
G4

குரு பசவா அண்டு கம்பெனி லிமிடெட்

சிவாசாரமாலா ஸங்க்யா—கூ.

உ

சிவமயம்

# தகனமும் கன்னமும்

இது

சேலம் செவ்வாய்ப்பேட்டை

வீரசைவ—சென்ன பசவைய செட்டியாரவர்கள்

குமாரர்

S. C. நாகி செட்டியாரவர்களால்

கன்னடத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

சென்னை

குரு பசவா அண்டு கம்பெனி லிமிடெட்

அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது

1934

விலை அணா 1]

[ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

சிவமயம்

# தகனமும் கனனமும்

எந்த உடல் பிராமணன் முதலிய உத்தம ஜாதியிற்பிறந்து உபநயன ஸம்ஸ்காரத்தை யடைந்திருக்கிறதோ, அவ் வுடலுக்கு ஆத்மவ்யோகமான பின்னர் அக்நி ஸம்ஸ்காரஞ் செய்யப்பட வேண்டியதே யன்றிப் பூமியில் அதனை நிக்ஷேபஞ்செய்யக்கூடா தென்றும், அவ்வாறு அக்நி ஸம்ஸ்காரத்துக்கு மாருகப் பூநிக்ஷேபஞ் செய்வது சூத்ர தர்ம மல்லாது, பிராமண தர்ம மல்லவென்றும், வீரசைவர் இறந்த உடலுக்கு வேத விதிப்படி அக்நி ஸம்ஸ்காரஞ் செய்யாது, பூநிக்ஷேபத்தைச் செய்வதனுல் இது வேத தர்மத்துக்கு முரணென்றும் சில அந்நிய மதத்தர் இம் மதத்தின் மேல் ஆக்ஷேபிக்கின்றனர். இது வீரசைவப்பிராமணசித்தாந்தத்தையறியாதகுற்றமன்றி வேறல்ல. வீரசைவப் பிராமணனுக்கு லிங்கதாரண பூர்வகமான லிங்கபூஜையானது ஸந்த்யாவந்தனம் போல, எல்லா ஜீவகர்த்வ்யமான விதியாயுள்ளது. ஸ்ரீகுரு சிவதீக்ஷையினுல் உடலைச் சுத்தஞ்செய்து, சிவகலாதிஷ்டிதமான லிங்கத்தை எப்போது உடலில் தரிப்பானே, அதுமுதற் கொண்டு இந்த லிங்கத்துக்கும் உடலுக்கும் நித்ய ஸ்பந்த முண்டாயுள்ளது.

யாவஜ்ஜீவமிதம் தத்த மிஷ்டலிங்கம் ஸமர்ச்சய ।

என்னும் வசனப்படி உயிருள்ள வரை இஷ்டலிங்க பூஜை செய்ய வேண்டுமென்று ஸ்ரீகுரு சீடனுக்குப் பலமான கட்டளையிட்டிருக்கின்ருர்.

ஓம் நமோ ப்ரஹ்மணே தாரணம் அஸ்த்வ நிராகரணம்
தாரயிதா பூயாஸம் ।

கர்ணயோ : ஶ்ருதம் மாச்வோட்வம் மமாமுஷ்ய ஓம்.

என்னும் மந்த்ரம் லிங்கதாரணத்தை விதித்து, **மாச்வோட்வம்** என்னும் சொல்லினுல் இந்த லிங்கத்தை எப்போதும் விட்டுப் பிரியாமலிருவென்று லிங்கதாரணத்துக்கு நித்யத்வத்தை விதித்துள்ளது.

பூமௌ ப்ரதிஷ்டிதம் லிங்கம் புனர்நோத் பாட்யதேயதா,
தேஹே ப்ரதிஷ்டிதம் லிங்கம் அந்தேபி நவியுஜ்யதெ॥

பூமியில் பிரதிஷ்டமான லிங்கம் எப்போதும் எப்படிப் பிடுங்கப் படாதோ, அப்படியே உடலில் பிரதிஷ்டமான லிங்கம் முடிவி னும் கூடப் பிடுங்கப்படாதென்று உறுதியான குருக்கட்டளை யிருப்ப தனுலும்,

தேஹோ தேவாலயஃப்ரோக்தஃ।

என்னும் சிவாகம வசனப்படி, சிவபெருமானுடைய அந்த வாஸஸ் தானமாகிய தேவாலயம் போன்ற இந்த உடலைத் தகனஞ் செய்வத ஞல் தேவாலயத்தைத் தகனஞ் செய்த தோஷம் சம்பவிப்பதனுலும் இந்த லிங்க தேகத்தைத் தகனஞ்செய்தல் கூடாது. தகன விதி வேத சம்மதமாயிருப்பது போலக் கனன விதியும் வேத சம்மதமேயாம்.

கர்தமேனப்ரஜாபூதா மயிஸம்பவகர்தம।

என்று ருக்வேதம் பூநிக்ஷேபத்தையே விதிக்கின்றது. இதன் பொருள் :—"கர்தமேன=ஜலத்துடன் கூடின பிருதிவியினுல், பராஜா :—திர்யக்மனுஷ்யாதி நானுவித ஜீவராசிகள், பூதா :—உண்டா யிருக்கின்றன. ஹேகர்தம=ஜலத்துடன் கூடின ம்ருத்பிண்ட ரூபமான பிருதிவியே மயி=(முப்பத்திரண்டு அங்குலப் பிரமாண முள்ள ஸமாதி யென்னும் பெயரையுடைய உனது கர்ப்பத்திலிருக் கின்ற காலம் பரிபாகமானதனுல் மரணமடைந்த) என் உடலை, ஸம்பவ=மறையச் செய்து, என் பாவங்களை யெல்லாம் நாசமாகச் செய்து, உத்தம லோகத்தை யடையச் செய் என்பதாம். இவ்வாறு ம்ருத புருஷன் பூதேவியைப் பிரார்த்திப்பான். மேலும், ம்ருத தேகத்தை ஸமாதியில் அடக்கஞ்செய்யுங்கால் விதி யுக்தமான

மஹீம் தேவீம் விஷ்ணு பத்னீ ஜுர்யாம் ப்ரதீசீமேனும் ஹவிஷாயஜாமஃ।

என்னும் இம் மந்த்ரம் கனன விதியையே விதிக்கிறது. அதாவது ஆஜ்யாதிஹவிஸுகள் அக்நிதேவனிடத்தில் எப்படி சொரியப்படுவ னவோ, அப்படியே உடலென்னும் ஹவிஸினுல் பூதேவியை அர்ச்சிக் கின்றேனென்பது இம் மந்த்ரப் பொருளாம்.

இவ் வுடல் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களினுல் உண்டாக்கப்பட்டிருப்பதனுலும், இத் தகைய

உடலை நிலம் முதலிய ஐந்து அவயங்களில் சேர்ந்த காற்று, ஆகாயம் என்னும் இவ்விரண்டு பூதங்கள் காணப்படாதவை யாதலினாலும், ஆத்ம வ்யோகமானபோது அவ் விரண்டு பூதங்களில் சேர்ப்பது இய லாது. ஆகவே காணப்படுகின்ற நெருப்பு, நீர், நிலம் ஆகிய இம் மூன்றில் சேர்த்தல் வேண்டும். இம் மூன்றில் நெருப்பும் நீரும் ஆகிய இவ் விரண்டும் கேவலம் நிலத்தின் ஆதாரத்தினால் நின்றிருக் கின்றன. மேலும், ஆதேயங்களான நெருப்பு நீர்களில் அந்த இறந்த உடலைச் சேர்ப்பினும் அவ் வுடலின் சில அமிசங்கள் மிஞ்சியே நிற்கும். ஆதலால், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் நான்கு பூதங்களுக்கும் ஆதார பூதமான நிலத்தில் இந்த இறந்த உடலை நிக்ஷே பஞ் செய்வதனால், இறந்த உடலின் அமிசம் சற்றும் மிஞ்சாமல் இறந்த உடலிலுள்ள அவயவ அமிசங்களெல்லாம் நிலத்தின் மூல மாகக் கிரமப்படி அந்தந்தப் பூதங்களிற் சேர்ந்துகொள்வதனால் தகன கர்மத்தைக் காட்டிலும் கனன கர்மமே மிகச் சிறப்புள்ளதாம். இக்கருத்தையே

> ஶரீரம் பஞ்சதத்வாக்யம் தத்வம் தத்வேந யோஜயேத்।
> தத்ராபி ப்ருதிவீ தத்வே யோஜனம் மோக்ஷஸாதனம்॥

என்று பராஶர ஸ்ம்ருதி தெளிவாய்க் கூறுகின்றது. அவ்வாறன்றி, இறந்த உடலுக்கு அக்நி ஸமஸ்காரத்தைச் செய்வதனால் இரத்தம், மாமிசம், மஜ்ஜைகளுடன் கூடின இந்த இறந்த உடல் ஸம்பூர்ண மாய் லயமடையாமல் எலும்பு முதலிய சில பாகங்கள் மிஞ்சியே நிற்கும். அத் தகைய மிஞ்சின பாகத்தை யெடுத்துக்கொண்டு ப்ருதீ வீம்கச்ச என்னும் மந்த்ரத்தினால் மறுபடியும் அந்தப்பிருதிவியிலே யே நிக்ஷேபஞ்செய்தல் வேண்டும்.

> தக்தேபி தேஹே புனரங்கஶேஷே நிக்ஷிப்யதேஸௌ புவிவா ஜலேவா।
> தஸ்மாத்விநிக்ஷேப விதிர்பலீயான் நிஶ்ஶேஷபாவா தபுனர் விதானாத்॥

என்று கூர்மபுராணம் இந்த ஸ்தூல ஸூக்ஷ்மாங்கங்களை யெல்லாம் விசாரித்து, தகன விதியைக் காட்டிலும் கனன விதியே பலப்பட்ட தென்று முறையிடும். இறந்தவனை லிங்கிப் பிராமணனுக்குச் செய்

யத்தக்க கனன விதியை உண்மையான எந்த வைதிகனும் நிந்திக்க மாட்டான்.

### (1) வாதுளாகமம்

ஶரீரம் பார்த்திவம் பாஹ்யம் லிங்கம் தத்ஸ்திதி பார்த்திவம் ।
உபயம் பார்த்திவம் யஸ்மாத்கோப்யம் ரந்த்ரே து பார்த்திவே ॥

(ஸ்தூல தேகத்தில் தரித்த லிங்கமும், பிருதிவியின் அமிசம். ஸ்தூல தேகமும் பிருதிவியின் அமிசம். இவ்வாறு, தேகலிங்கங்களிரண்டும் பார்த்திவங்க ளானதனுல் லிங்கதாரியின் இத் தகைய இறந்த உடலுக்கு பூநிக்ஷேப விதியே முறைமையானது.)

### (2) ஸதாநந்தோபநிஷத்

ஶிவலிங்கதரம் விப்ரம் விபன்னந்து ந தாஹயேத் ।
அதவா தாஹயேத்தஸ்ய ப்ரஹ்மஹத்யா ததா பவேத் ॥

(லிங்கதாரியான விப்பிரனுடைய இறந்த உடலை எவ்விதமான சங்கடங்களுண்டாயினும், அக்நி ஸம்ஸ்காரஞ் செய்யலாகாது. எவனுவது ஒரு கால் லிங்கத்தைக் கழற்றித் தகனஞ்செய்தால், அவனுக்கு ப்ரஹ்ம ஹத்யா தோஷம் சம்பவிக்கும்.)

### (3) ஸ்காந்த புராணம்

ம்ருதலிங்காங்கினோ தேஹ ம்ஜ்ஞானுத் தஹதேயதி ।
ஶிவாலய ஸஹஸ்ராணும் தாஹ தோஷமவாப்நுயாத் ॥

(எவர் இறந்த லிங்காங்கி தேகத்தை யறியாமல் தகனஞ் செய்வாரோ, அவர் ஆயிரக் கணக்கான சிவாலயங்களைத் தகனஞ்செய்த தோஷத்திக்குப் பாகஸ்தராவார்கள்.)

### (4) வீராகமம்

கோடி ஶைவாலயம் தக்தம் ஶிவ பக்தம் தஹேத்யதி ।
தஹனஜ்ஞானயோகேன ப்ரஹ்ம ஹத்யா மவாப்நுயாத் ॥

(சிவபக்தனைத் தகனஞ் செய்கிறவன் கோடி சிவாலயங்களைத் தகனஞ் செய்தவனுவான்; ஞானயோகியைத் தகனஞ் செய்வதால் ப்ரஹ்ம ஹத்திதோஷமடையப்படும்.)

## (5) சிவரஹஸ்யகண்டம்

லிங்கம் பூதிம்ச ருத்ராக்ஷம் யேதேஹே தாரயம்திச ।
ஸர்வாங்க லிங்க ஸம்யுக்தம் தத்தேஹம் ஶிவமுச்யதே ॥
த்த்தேஹம் தஹதேகர்மி நரக: கால மக்ஷயம் ॥

(லிங்கமும், விபூதியும், ருத்ராக்ஷமும் எந்தத்தேகத்தில் தரிக்கப் பட்டிருக்கின்றனவோ, ஸர்வாங்கங்களிலும் லிங்கத்தோடு கூடிய அத்தேகம் சிவமாகின்றது.)

## (6) சிவ தர்ம காத்திரம்

பூமௌ விநிக்ஷிபேத்தேஹம் பக்தானும் ஶிவயோகினும் ।
அஜ்ஞாத்வா தஹனம் குர்யாத் நரகம் வாதிகச்சதி ॥

இவ்வாறு, ஶ்ருதி, ஸ்ம்ருதி, ஆகமங்களில் இறந்து போன லிங்க தேகத்துக்குத் தகன விதி மிகவும் நிஷேதமாயிருப்பதே யன்றிப் பூலோகத்தில்வீரசைவசித்தாந்த ஸ்தாபனுசாரியரான ஸ்ரீ ரேணுகாதி பஞ்சாசாரியர் சித்தாந்தத்துக்கும் கனனவிதியே மிகச்சிறப்புற்றதாம். இவ்வாறு, வேதாகமோபநிஷத் புராண வசனங்களின்படி கனன தத்துவத்தை ஆக்ஷேபிப்பவர்கள் நிர்மலாந்தக்கரணத்துடன் யோசித்து மேன்மை யடைதல்வேண்டும்.

கர்தமேன ப்ரஜாபூதா:, மஹீந்தேவீம் விஷ்ணுபத்னீம் என்னும் இவ்விரண்டு ருக்வேத மந்த்ரங்களுக்கு இறந்துபோன லிங்க தாரிவிப்ரனுடையஉடலைப் பூமியில் நிக்ஷேபஞ்செய்யவேண்டியதென் னும் பொருளை வீரசைவ சித்தாந்தாநுஸாரமாய் நாம் தெரிவித்தது சரியே. ஆனல், சாமானியமாய் நிக்ஷேபிப்பதை விதிக்கும் இத் தகைய ஶ்ருதிவாக்யங்கள் எவ்விடம் காணப்படுகின்றனவோ, அத் தகைய வசனங்களெல்லாம் இறந்துபோன அலிங்கி ஸந்யாஸியின் உடலை உத்தேசித்திருப்பதனுல் நிக்ஷேபிப்பதைவிதித்த ஶ்ருதிகள் ஸந்யாஸிக் குச் சம்பந்தப்பட்டவை யன்றி, லிங்கதாரிகளான ஸகலாஶ்ரமிகளுக் கும் சம்பந்தப்பட்டவை யல்லவென்று சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு. ஆனல், நிக்ஷேபத்தை விதிக்கும் அந்த ஶ்ருதிவாக்கியங்களில் ஸந்யா ஸியென்று போதிக்கும் பதம் ஒன்றும் இருக்கவில்லை. "ஓ பூஜ்யளான பூமிதேவியே! என் உடல் உன்னுல் உற்பத்தியாவதனுல் இறந்து போன என் உடலை உன்னிடத்தில் மறைத்துக்கொள்" என்று ம்ருத புருஷன் பூமியை வேண்டிக்கொள்வதை நோக்குமிடத்து, சாமானிய

மாய் இவ்வுடல் பிருதிவி சம்பந்தமான தனல் பிருதிவியிலேயே நிக்ஷேபிப்பது உத்தமமென்று தெளிவாய் விளங்கும். அன்றி, அவ் வாக்யம் ஸந்யாஸியின் உடலை மாத்திரம் நிக்ஷேபிக்க வேண்டுமென்னும் பொருள் படுவதில்லை. பராஶர ஸ்ம்ருதியானது **ஶரீரம் பஞ்சதத்வாக்யம்** என்று முதலில் சரீர பதத்தைக் கூறி, **தத்ராபி ப்ருதிவீ தத்வே யோஜனம் மோக்ஷஸாதனம்** என்று இறந்த உடலைப் பூமியில் அடக்கஞ்செய்வதனு லுண்டாகின்ற பலனையும் கூறியுள்ளது. அவ்வாறு, ஸந்யாஸியைக் குறித்துக் கூறியிருப்பின் ஸந்யாஸி வாசகமானபதம் அந்த ஸ்ம்ருதியிலாயினும்காணப்படவேண்டும். அத் தகைய பதங்கள் ஶ்ருதிகளிலும், ஸ்ம்ருதிகளிலும் காணப்படவில்லை. ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் **யதி** என்னும் பொருள்படும் பதங்கள் இல்லா திருப்பினும் நிக்ஷேபிப்பதைக் கூறும் அத் தகைய வசனங்கள் **யதியின்** பொருட்டுக் கூறியதன்றி, லிங்கதாரியின் உடலுக்குக் கூறினதல்ல வென்று அந்தஶ்ருதி ஸ்ம்ருதிகளை நிர்ப்பந்தஞ்செய்வது லோகோத்தாரத்தின் பொருட்டுப்பிறந்துள்ள ஶ்ருதிகளுக்குக் குறைவுகற்பிப்பதாகும். பரமபூஜ்யையும், லோகோத்தாரஞ் செய்பவளுமாயிருக்கும் ஶ்ருதிதேவி, தன் விஷயத்தில் குறைவு கற்பிக்குமவர்மேல் கோபமடையாதிராள். அஸ்து! அலிங்கியான ஸந்யாஸியின் உடலைப் பூமியில் அடக்கஞ்செய்வது எவ்வளவுஉலகத்தில் வழக்கமாகி வந்திருக்கின்றதோ, அதைவிட அதிகமாக லிங்காங்கிகளாகிய ப்ரஹ்மசர்யாதி ஸகலாஶ்ரமிகளின் இறந்தஉடலையும்பூமியில் அடக்கஞ்செய்வதுவழக்கமாகிவந்திருக்கின்றதனுல் லிங்கதாரியான ப்ரஹமசாரியின் உடலையாயினும், க்ருஹஸ்தன் உடலையாயினும், வானப்ரஸ்தன் உடலையாயினும், ஸந்யாஸியின் உடலையாயினும் பூமியில் அடக்கஞ்செய்யவேண்டியதன்றி, தகனஞ்செய்வதுகூடாதென்று சிவ சித்தாந்தத்தில் விஸேஷமாய் வாக்யங்கள் இருப்பதனுல் **கர்தமேன, மஹீம் தேவீம்** முதலிய வசனங்கள் லிங்கதாரிகளை உத்தேசித்திருப்பனவன்றி, கேவலம் ஸந்யாஸிகளை உத்தேசித்திருப்பன வல்லவென்பது நன்கு விளங்கும். அந்த ஶ்ருதிகளில் லிங்கதாரி உடலென்ருயினும், யதியின் உடலென்ருயினும் எவ்விதமான பதமுமில்லாமல் சாமானியமாய் நிக்ஷேபிப்பதைக் கூறியிருப்பினும், மற்ற **ஶ்ருதிவாக்யங்களினுல்** லிங்காங்கி புருஷனுடைய உடலை யுத்தேசித்தே கூறியிருத்தல் வேண்டுமென்று அந்த ஶ்ருதிகளுக்குப்பொருளை நிச்சயித்துக்கொள்ளுதல்வேண்டும். **ஸதாநந்தோபநிஷத்தில் ஶைவலிங்கம் உர ஃ ஸ்தலே தார்யம் விப்ரேண** என்று

முதலில் லிங்கதாரணத்தை விதித்து, பின்னர், ஶிவாஸ்தனூர சித்தாத்பிலே நிக்ஷிபேத் என்று லிங்கதாரியான விப்ரனுடைய இறந்த உடலைப் பூமியில் அடக்கஞ்செய்தல் வேண்டுமென்று தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது.

இந்த ஶ்ருதியின் பொருள் வருமாறு:— ஶிவா:=லிங்கரூபமான சிவ சம்பந்தமுள்ள, தனூ=உடல்களை, அசித்தாத்=மரணமடைந்த பின்னர், பிலே நிக்ஷிபேத்=ஸமாதியில் வைத்தல் வேண்டும்.

இவ்வாறு, ஶ்ருதி வாக்யங்களில் லிங்காங்கி விப்ரனுக்கு நிக்ஷேபிக்கும் விதி தெளிவா யிருப்பதனல் நிக்ஷேபிப்பதை விதிக்கும் சாமானிய ஶ்ருதிகளும், ஸ்ம்ருதிகளும் லிங்கதாரியையே லக்ஷியப்படுத்துகின்றன. அப்படியாயின், ஶ்ருதி ஸ்மிருதிகளின் வசனங்களினலும், சிவாகம வசனங்களினலும் பூமியில் அடக்கஞ் செய்வதே வேதவிதி யென்று கூறியதன்மேல், பித்ருமேத பிரகரணத்தில் தகனஞ்செய்தல் வேண்டுமென்று கூறிய ஶ்ருதிகளுக்கு விரோதம் சம்பவிக்கின்றது. இவ்வாறு, ஶ்ருதிகளுக்குப் பரஸ்பர விரோதம் சம்பவிக்கும் பட்சத்தில் இவ்விரண்டு ஶ்ருதிகளுக்கும் விவஸ்தை செய்து விரோதத்தை யொழிக்க வேண்டுமாதலின், தகனத்தை விதிக்கும் வாக்யங்கள் அலிங்கி ப்ராஹ்மணர்க்குக் கூறியதென்று அறிதல் வேண்டும்.

இவ்வாறு, ஶ்ருதிகளுக்குப் பரஸ்பர விரோதம் சம்பவிக்கும் சந்தர்ப்பத்தில் பொருளைச் சுருக்கி, இரண்டு வாக்யங்களுக்கும் பிரமாணத்தைச் சொல்லும் பத்ததி சாத்திரங்களில் பிரசித்தமாயுள்ளது. **மாஹிம்ஸ்யாத் ஸர்வாபூதானி** என்னும் ஶ்ருதி பசுவதை செய்யக்கூடாதென்று போதிக்கின்றது. **அக்நி ஷோமீயம் பசுமாலபேத** என்னும் ஶ்ருதி யாகத்துக்கு வேண்டிய பசுவை வதைக்கலாமென்று போதிக்கின்றது. இவ்வாறு, ஶ்ருதிகளில் பரஸ்பர விரோதமுண்டாகி **ஸாவகாஶ நிரவகாஶயோர் நிரவகாஶயேவ பலீய:** என்னும் நியாயத்தினல் பிரபலமான **அக்நிஷோமீயம்** என்னும் வாக்யம் **மாஹிம் ஸ்யாத்** என்னும் துர்ப்பலமான வாக்யத்தைக் கண்டிப்பதனல் யாக சம்பந்தமான பசுவதை ஒன்றில் மாத்திரம் **மாஹிம்ஸ்யாத்** என்னும் வாக்யம் பிரவர்த்திப்பதில்லை யென்றும், மற்றவிஷயங்களிலெல்லாம்பிரவர்த்திக்குமென்றும்பொருள் சுருங்கச்

MAHAMAHOPADHYAYA

சொல்லிப் பெரியோர் ஶ்ருதி விரோதத்தைப் பரிகாரஞ் செய்துள்ளனர். அவ்வாறே, நிக்ஷேபத்தைப் போதிக்கும் நிரவகாஶ ஶ்ருதிகளுக்கும், தகனத்தை விதிக்கும், ஸாவகாஶ ஶ்ருதிகளுக்கும் பரஸ்பர விரோதம் சம்பவிப்பதனுல் பிரபலமான கனன விதாயக ஶ்ருதிகளினுல் தகன விதாயக ஶ்ருதிகள் துர்ப்பலங்களாவதனுல் லிங்கதாரியான பிராமணன் விஷயத்தில் மாத்திரம் கனனவிதாயக வாக்யங்களுக்குப் பிரவர்த்தியுண்டாகி, மற்ற தகனவிதாயக வாக்யங்களெல்லாம் அலிங்கிப் பிராமணன் விஷயத்தில் பிரவர்த்திக்கின்றனவென்று கொள்ளுதல் வேண்டும்.

சில மந்த்ரங்களினுல் லிங்காங்கி விப்ரனுக்குக் கனனவிதானம் காணப்படினும், ம்ருத புருஷம்கனேத் (ம்ருதபுருஷனுக்கு பூ நிக்ஷேபமே) என்னும் விதிவாக்யம் எவ்விடத்திலும் காணப்படாமையினுல் கனனம் விதி விகிதமல்லவெனின், அவ்வாறே, சிலமந்த்ரங்களினுல் தகனம் காணப்படினும் ப்ரேதம் தஹேத் என்னும் விதி எவ்விடத்திலும் காணப்படாமையினுல் தகனம் விதி யென்பதில்லையென்று சொல்லலாம். விதியா யிருப்பினும். பித்ருமேதாதி பிரகரணத்தில் சொன்ன மந்த்ரங்களில் காணப்படும் சின்னங்கள் ப்ரேதம் தஹேத் என்னும் விதியைக் கற்பிக்கின்றன வென்று சொன்னுல் இவ்விடத்திலும் முற்கூறிய மந்த்ரங்களில் வரும் விஸேஷசின்னங்கள் ம்ருத புருஷம் கனேத் என்னும் விதி ப்ரயோஜகரூபத்தைக் கற்பிக்கின்றனவென்று சொல்லலாம். இவ்வாறு, லிங்கதாரி ப்ராஹ்மணனுடைய இறந்த உடலை வித்யுக்தமாய் பூ நிக்ஷேபஞ்செய்யும் விஷயத்தில் ஶ்ருதி ஸ்ம்ருதி, ஆகமங்களில் பலமான பிரமாணங்கள் இருக்கின்றன. அன்றியும், வீரசைவ சித்தாந்தத்தில் இந்தக் கனன விதானத்தின் விஷயம் அனேக ப்ரமாண யுக்தி ப்ரத்யுக்தி யநுபவங்களைக் கொடுத்து லிங்கியான இறந்த உடலுக்கு கனன விதியே பலதாயகமன்றித் தகனவிதி பலதாயகமல்ல வென்று மிகத் தெளிவாய்ச் சொல்லப்பட்டுள்ளது. வீரசைவ மதஸ்தாபகரான ஸ்ரீரேணுகாத்யாசார்யர் பிரமாணத்துடன் கட்டளையிட்டிருக்கும் இந்த வேத விகிதமான கனன விதானத்தின் மீது மத ரஹஸ்யத்தை யறியாத சில பரமதஸ்தர் செய்யும் ஆக்ஷேபத்தைப் பெரியோர் ஒத்துக்கொள்ளார்.

தகனமும் கனனமும் முற்றிற்று.

---

Printed at Penrose & Co., 19, Sunkurama Chetty Street, G.T., Madras.

# பதிப்பித்த புத்தகங்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | சித்தாந்த சிகாமணி (மூலமும் - உரையும்) | 2 | 8 | 0 |
| 2. | வசவபுராணம் (மூலமும் - உரையும்) .... | 8 | 0 | 0 |
| 3. | பிக்ஷாடன நவமணி மாலை மூலமும் - உரையும் .... | 0 | 2 | 0 |
| 4. | பெரியநாயகியம்மை விருத்தம் மூலமும் - உரையும் .... | 0 | 3 | 0 |
| 5. | வீராசாரக் கட்டளை .... .... | 0 | 1 | 6 |
| 6. | வீரசைவ விளக்க வினவிடை .... | 0 | 12 | 0 |
| 7. | அநுபவஸாரம் (வேதாந்த நூல்) .... | 0 | 5 | 0 |
| 8. | மணிவாசகப் பெருமான் வரலாற்று வினவிடை .... | 0 | 7 | 0 |
| 9. | ஸ்ரீவைஷ்ணமும் வீரசைவமும் .... | 0 | 2 | 0 |

# இனிப்பதிப்பிக்கும் புத்தகங்கள்

1. வீரசைவ சிவபூஜா விதி
2. வீராகமம்
3. இஷ்டலிங்க வபிஷேக மாலை யுரை
4. குமாரதேவர் அபிஷேக மாலை யுரை
5. பழமலையந்தாதி யுரை
6. பிரபுலிங்கலீலை யுரை
7. அக்க மகாதேவி சரித்திரம்
8. பிரபுதேவர் சரித்திரம்
9. வசவதேவர் சரித்திரம்
10. சிவ ஞான தீபம்

S. C. Nagi Chettiar, Madras.